


ள்

திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆவணி 6
சென்னை, 21—8—48

விச்
1


(1)


(2)

# போர்வாள் நிலையத்தில் அறப்போர் வீரர்கள்!

16-8-48 திங்களன்று காலை, தொண்டைமண்டலம் பள்ளியில் மறியல் செய்தபின், அறப்போர் வீரர்கள், வெள்ளம் போன்ற தமிழர் கூட்டம் பின் தொடர, இந்தி ஒழிக என முழங்கிய வண்ணம் ஜார்ஜ் டவுன் பகுதிகளில் ஊர்வலமாக வந்தனர். போர்வாள் நிலையத்தின் வழியாக ஊர்வலம் சென்றபோது, நிலையத்தில், அறப்போர் வீரர்கட்கு, 'போர்வாள்' ஆசிரியர்களாலும் அலுவலகத் தோழர்களாலும் தக்க உபசாரம் செய்யப்பட்டது. முதல் படத்தில் "போர்வாள்" நிலையத்தின் முன் மறியல் வீரர்கள் நிற்பதையும், இரண்டாம் படத்தில், முத்தியாலுப்பேட்டை வழியாக பிரம்மாண்டமான ஊர்வலம் ஊர்ந்து செல்வதையும் காணலாம்.

[படப்பிடிப்பு: **பாவலர் அப்துல் காதர்**]

**Best copy available.**



வெளி
நாடு

# நல்ல தீர்ப்பு கூறுங்கள்!

**"போர்வாள், தன் பயணத்தைத் தொடங்கியபோது, தன் இலட்சியங்கள் இவை இவை என்று நிரல் நிரலே எழுதிவைத்து, அவற்றை ஓர் தலையங்கமாக்கித் தந்தது தமிழகத்திற்கு.**

**போர்வாள், தன் இரண்டாவது ஆண்டில் புகுகின்ற இஞ்ஞான்று, அத் தலையங்கத்தை மீண்டும் தந்திருக்கிறோம்—வேறு கட்டுரை இல்லாத காரணத்தால் அல்ல, கட்டுரைகள் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன வெளியிட இடமின்றி,—ஆனால் நாம் அத் தலையங்கத்தை மீண்டும் தந்திருப்பது—அத் தலையங்கத்தைப் படித்துப் பார்த்து, எந்த அளவுக்கு அதில் குறிப்பிட்டுள்ள இலட்சியங்களை, "போர்வாள்", இந்த ஓராண்டு காலத்தில் நிறைவேற்றி வைத்திருக்கிறது என்பதுபற்றி, நீங்கள், ஒரு நல்ல தீர்ப்பு நல்கவேண்டும் என்பதற்காகத்தான்!**

**தீர்ப்புக் கூறுங்கள்—இதோ, கீழே, அந்தப் பழைய தலையங்கமிருக்கிறது, உங்கள் உள்ளத்தில், போர்வாளின் ஓர் ஆண்டு சேவை படிந்துகிடக்கிறது, அதனையும் இதனையும் சீர்தூக்கிப் பாருங்கள், நல்ல தீர்ப்பு கூறுங்கள்.**

இன்பத் திராவிடம் தனது போர்ப் பாதையை அமைத்துக் கொண்டிருக்கும் பொன்னான நேரத்தில் "போர்வாள்" வருகிறது, தமிழர்களைக் காண! கண்டு கை குலுக்க!

நாம் தமிழகத்திற்குத்தரும் "போர்வாள்" அலங்காரத்திற்காக உருக்கி வார்க்கப்பட்ட தங்க வாள் அல்ல. ஊரை—உலகை ஆட்டிப் படைக்கும் உல்லாசச் சீமான்களின் இடுப்புப் பட்டையில் தொங்குவதற்காகத் தீட்டப்பட்ட வயிர வாளும் அல்ல. ஆயிரம் உண்டிங்கு சாதி என்று பாசுரம் பாடிக்கொண்டு, அந்த சாதி வேறுபாட்டை நிலை நாட்டும் வர்ணாஸ்ரம தர்மத்தையும் அதற்கு ஆதாரமான இந்துமதத்தையும் "மாபாவி"களிடமிருந்து காப்பாற்றுவதற்காகக் கொதிக்கும் கண்களும் கொந்தளிக்கும் உள்ளமும் உடையராய் "உலா" வருகின்ற பஃதாம் பசலிகளின் கையிருப்பு வாளும் அல்ல. நறுமண நெய் தடவி, அழகிய பூச்சூடி, முத்தை மரகதத்தை மாணிக்கத்தை வைடூரியத்தை அங்கங்கே பொருத்தி வைத்து பளீர் பளீர் என்று மின்னும் படியாக "மன்னாதி மன்னர்கள்" பட்டாடை மீது தவழுமே அத்தகைய வாளும் அல்ல. வெளிப்படையாகவே சொல்லிவிடுகிறோம் அழகுக்கோ அலங்காரத்திற்கோ பிறர் பார்த்து மெச்சுதற்கோ பலரது கண் பார்வையைக் கவர்வதற்கோ ஏற்ற வாள் அல்ல, 'இன்பத் திராவிடமே இந்தா' என்று இந்நாள் நாம் தரும் இப்"போர்வாள்".

நமது"போர்வாள்" போர்வாளேதான். இழந்தவிடுதலையைத்திரும்பப் பெறவேண்டும் என்று உறுதி செய்துகொண்டு, "பெற்றால் திராவிடநாடு இல்லையேல் இடுகாடு" என்று சூள் உரைத்துவிட்டு வீரம் ததும்பும் நெஞ்சமும் தமிழ்க்கனல் கக்கும் கண்களும் உடையராய் அதோ திராவிடர் பாசறையில் நிரல் நிரலே அணிவகுத்து நிற்கும் அந்த ஆயிரமாயிரம் இளங்காளைகளின் கரங்களில் நேரே சென்று தங்குவது இவ் வாள்.

சேரன் செங்குட்டுவன் பரம்பரையினர் அவர்கள். அவர்கள் எதிர்த்து நிற்பதோ கனக விசயர் பரம்பரையை. எனவே வெற்றி இறுதியில் எந்தப் பட்டாளத்தை மேவும் என்று சொல்வதற்கு ஆருடம் பார்க்கத் தேவையில்லை. தடைக்கற்கள் எத்தனைதான் அவர்களுடைய போர்ப் பாதையில் கிடத்தப் பட்டுமே அவர்களுடைய வீர உள்ளம் அத்தனையையும் தாண்டிக்கொண்டு வெற்றி முரசு கொட்டத்தான் போகிறது. அதை நாம் காணத்தான் போகிறோம், ஆனால் வெற்றிபுரிக்கு அவர்கள் செல்லு முன்னால் கடும்போர் புரிந்தாகவேண்டும். சமர்க் களத்தில் எதிரிகளின் கோட்டத்திலிருந்து பிறக்கும் நேர்முகத் தாக்குதல்களை மட்டுமல்ல—அவற்றைச் சமாளிப்பது அத்தமிழ் வீரர்களுக்கு எளிது. ஆனால் அவற்றைவிட மிக முக்கியமான, சூழ்ச்சி நிறைந்த, நேரிய வழியில் வீரர்களை வீழ்த்த முடியாதபோது பரம்பரை பரம்பரையாக ஆரிய இனத்தவர் கையாண்டு வருகின்ற—மறைமுகத் தாக்குதல்களையும் சமாளித்தாகவேண்டும். நாம் மறைக்கவில்லை, மறக்கவுமில்லை, அந்தத் தமிழ் வீரர் கூட்டம் தங்கள் தாய்த் திருநாட்டைக் காப்பதற்காகத் தொடுத்து நடத்தவேண்டிய போர் மிக மிகக் கடுமையானதாய்த்தான் இருக்கும். இறுதி வெற்றி அவர்களுக்கே என்பதை நாம் எவ்வளவு உறுதியாய்ச் சொல்ல முடியுமோ அதைவிட அதிகமான உறுதி நமக்குண்டு இனி நடக்கவிருக்கும் போர் பலமானதுதான் என்பதில்.

ஆம்! வர இருக்கும் போராட்டம் பலமானது தான். அந்தப் பலமான போராட்டத்தில் தமிழர்—திராவிடர் பக்கம் நின்று அவர்களுக்கு உற்சாக மூட்டி, அவர்களுடைய உள்ளுணர்ச்சியைத் தட்டியெழுப்பி, கங்கை கொண்ட இராசேந்திரன் கூட்டத்தவர் நீங்கள் என்பதை எடுத்துக் காட்டி, பர்மாவில் புலி பொறித்த பெருமக்கள் நீங்கள் என்னும் உண்மையை நன்கறியச் செய்து, ஈழத்தில் கொடி நாட்டிய பராந்தகன் பின்னவர் நீவிர் என்பதையும் சொல்லிக்காட்டி, இமயத்தில் தன் இலச்சினையிட்ட திருமாவளவன் அவர்களுடைய முன்னவனே என்பதையும் நினைப்பூட்டி, "ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்" என்னும் சங்க கால மன்னவனை அவர்களுடைய உள்ளத்திற்கு அழைத்துவந்து, சோழ

**தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! இன்பத்**

வேந்தர்தம் கடற்படையும் பாண்டியர் பண்பாடும் சேரன் சிறப்பும் மறைந்துபோன மாயத்தையும் இடைநடுவே சொல்லி வைத்து, அவ் வீரர்களுக்கு உற்ற படைக்கலமாய் விளங்கும் நம் வாள்.

போர்வாள், தமிழருடைய போராட்டத்தின் போது தமிழ்ச் சூழலில் தடுக்கி வீழ்பவரை எடுத்து நிறுத்தும்; அலுத்துச் சாய்ந்தவர் தம்களைப்பை மாற்றும்; ஒடிந்து போன உள்ளங்களை இணைத்துக் காட்டும்; ஓயாத தொல்லையிடைத் தீராதஇன்பம்தீட்டும்; போராட்டத்தின் போது தமிழர்களுக்குச் சலிப்புத்தட்டுவதுண்டாயின் புறநானூற்றைப் புரட்டிக் காட்டும். குலையும் அணி வகுப்புகளையும் நேர் பெற நிறுத்தும்.

எஞ்ஞான்றும் போர்வாள் நேர்மையின் பக்கமே இருக்கும். நியாயத்தின் வெற்றிக்கே போராடும். திராவிடர்தம் பண்பாட்டைப் பழுதுருவண்ணம் போற்றவும், கால நிலைமைக்கு ஏற்பப் புதுக்கவும் அது சிறிதும் அஞ்சாது. ஆணவம் எங்கெங்கே கொடிகட்டி வாழ்கிறதோ, அநீதி எங்கெந்த இடத்தில் அரசாள்கிறதோ, அக்கிரமம் யார் யார் இடத்தில் என்னென்ன உருவத்தில் உலவுகிறதோ அங்கெல்லாம் சென்று சென்று போர்வாள் அறப்பணி ஆற்றும்.

நமது வாள், புற்றில் வாழ் அரவுக்கஞ்சாது; பொய்யர்தம் மெய்யுக் கஞ்சாது; விற்றெழில் வேந்தர்க் கஞ்சாது; விறல்மிகு சேனைக்கும் அஞ்சாது; ஆளவந்தார்களின் கோபப் பார்வைக்கோ அதிகார பீடத்தின் இமையா நாட்டத்திற்கோ சிறிதும் அஞ்சாது; மேட்டுக்குடி மக்களின் முறைப்புக்கும் முணுமுணுப்புக்கும் கொஞ்சமும் அஞ்சாது; சடங்கு சம்பிரதாயம் என்னும் கோட்டை கொத்தளங்களிலிருந்து பிறக்கும் அதிர்வேட்டுகளுக்கோ அது தினையளவும் அஞ்சாது. ஆனால் பற்றில்லா ஏழைக் கண்ணீர் பார்க்கவோ அது அஞ்சி நடுங்கும், ஏழை அழுத கண்ணீர் கூரியவாளை ஒதுக்கும் என்பதை அது நன்கு உணர்ந்த காரணத்தால்.

சுயமரியாதைச் சண்ட மாருதம் எனத் தரும் "**குடி அரசு**" இதழை 24 ஆண்டுகளுக்கு முன்னால் துவக்கி வைத்த போது அஞ்சாத நெஞ்சு படைத்த அந்த அடலேறு **பெரியார் இராமசாமி** குறிப்பிட்ட அதே வாக்கியங்களில் சொல்வதானால் "போர்வாள்" எவருடைய தயவுக்கோ சுயநல வாழ்விற்கோ கீர்த்திக்கோ நடைபெறவில்லை, யோக்கியமாய் உண்மையாய் நடக்கக் கூடிய காலம்வரை அது நடக்கும்; அவ்விதம் நடக்க அதற்கு யோக்கியதை இல்லையானால் எப்போதாவது எந்தக் காரணத்தாலாவது நியாயத்தைக் கூறமுடியாத நிலை ஏற்பட்டால், அதுதானே மறைந்து போகுமே அல்லாமல் மானங்கெட்ட சில விலங்குகளைப் போல் கோழை வாழ்வு வாழ ஒருக்காலும் ஒப்புக் கொள்ளாது.

உண்மையை ஒளிக்காது எடுத்துச் சொல்லுவதே நமது இலட்சியம்; அது யாருக்கு எவ்வளவு குமட்டலாய் இருந்தாலும் சரி அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல், இரட்டுற மொழிதல், ஒன்றுக்கொன்று நேர் முரணான எட்டுக் கருத்தை உள்ளமைத்து சொற்றொடர்கள் தீட்டுதல், அதுவும் சரி இதுவும் சரி எல்லாம் சரி என்று வேதாந்த வெற்றுரையாடுதல் முதலிய வழிகள் நமக்குத் தெரியா. அவை நமக்குத் தெரிய வேண்டிய தேவையுமில்லை, நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு உரைக்கும் நேரிய வழி ஒன்றுதான் நமக்குத்தெரியும். அது ஒன்றே போதும். புத்துலகப் பாதையில் தமிழகத்தைச் செலுத்தும் சீரிய பணியை மேற்போட்டுக் கொண்டுள்ள நமக்கு வேறு வழி ஏனோ?

இறுதியாக ஒரே வார்த்தை. அருமைத் தமிழகத்தின்—இன்பத் திராவிடத்தின்—நாம் பிறந்த பொன்னாட்டின் நலத்திற்குக் கேடு சூழ்வார் யாவரே ஆயினும்—அவர் நமக்குப் பகைவராயினும் சரியே அன்றி நண்பராயினும் சரியே—அவர்தம் சொல்லும் செயலும் போர்வாளால் அச்சம் தயை தாட்சண்ணியமின்றி வெறுத்து ஒதுக்கப்படும்.

"எவ்வளவு நியாயமான இலட்சியத்தை அடைய வேண்டுமானாலும் அதற்காகக் கஷ்ட நஷ்டமடைதல் என்னும் விலை கொடுத்துத் தான் தீர வேண்டும்"—இது வைக்கம் வீரரின் உள்ளம்.

"திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியம் ஒன்றுதான் நம்மை சுதந்தரத்திற்கு—முழு சுயேச்சைக்கு—பரிபூரண விடுதலைக்குக் கொண்டு போய்விடும்."

—இதுவும் **தலைவர் பெரியாரின்** கருத்து.

நம் போர்வாளின் இலட்சியம் அத்தனையும் இந்த இரு வாசகங்களில் புதைந்து கிடக்கின்றன. இவ்வாசகங்களே போர்வாளுக்கு வழிகாட்டிகள். போர்வாளுக்கு மட்டுமா—இல்லை—திராவிட நல் திரு நாட்டிற்கே வழிகாட்டிகள்.

தமிழர்களே! உங்கள் கரங்களில் தவழ்ந்து விளையாட இதோ வருகிறது "போர்வாள்" எடுத்துக் கொள்ளுங்கள். வீரர் கையில் விளங்கத்தானே வாள் இருக்கிறது!

---

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் கூறுவோம், இந்த அஞ்சாமைதான் நம் கேடயம். இந்தக் கேடயம் இருக்கும் வரைதான், இருந்தால் தான், நம் வாள், வாள்! இல்லையேல் அது வெறும் இரும்புத் தூள், தூள்!

இந்த ஒரு சில வார்த்தைகளோடு நாம் இரண்டாவது ஆண்டுப் பயணத்தைத் தொடங்குகிறோம். பயணத்தைத் தொடங்கு முன்பு, நாமும், நம்போன்றார் எண்ணற்ற திராவிடரும் செல்லும் இந்த ஈரோட்டுப் பாதையை அமைத்துத் தந்த புரட்சியின் சின்னம் **பெரியார் இராமசாமி** அவர்களுக்கும், வாலிப உள்ளங்களின் வசிகரத் தென்றல் **தளபதி அண்ணா** அவர்களுக்கும், தமிழர் தம் நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலவு **கவிஞர் பாரதிதாசனார்க்கும்** நம் பணிவையும் அன்பையும் நன்றியறிதலையும் உரிமையாக்குகின்றோம். வணக்கம்.

---

**தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்**

# போர்வாளை வாழ்த்துகிறார் படைத்தலைவர்!

"**போர்வாள்**" வாரத் தாளானது, தான் பிறந்த ஓராண்டை நிரப்பி, இரண்டாவது ஆண்டைப் பெறுகிறது என்பது கேட்டு மிகுதியும் மகிழ்ச்சி அடைகிறேன்.

"**போர்வாள்**", சென்ற ஓர் ஆண்டாக, திராவிடக் கழக வளர்ச்சியையும் அதன் கொள்கையையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு, அவற்றில் களங்கமற்ற நம்பிக்கையும் விசுவாசமும் வைத்து நடத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதை நான் நன்கறிவேன்.

"**போர்வாள்**", அதன் காரணமாகவே திராவிட மக்களின், சிறப்பாக, திராவிடக் கழகத்தாரின் ஆதரவையும் பாராட்டுதலையும் பெற்று இருக்கிறது என்பதையும் உணர்கிறேன்.

"**போர்வாள்**" இதுபோலவே எப்போதும் நடந்துவந்து, மக்களிடம், இனியும் அதிகமானதும் பலமானதும் நிலையானதுமான நம்பிக்கையும் பாராட்டுதலும் ஆதரவும் பெறவேண்டும் என்று நான் பெரிதும் ஆசைப்படுவதோடு அப்படியே நடக்கும் என்றும் கருதுகிறேன்.

சென்னை
18-8-48 } ஈ. வெ. ராமசாமி


பல அறிஞர்களாலும், பத்திரிகைகளாலும்,
மிகச் சிறந்த நூல் எனப் புகழப்பெறும்.

**கார்ல் மார்க்ஸ்**

(ஆசிரியர்: எஸ். சதாசிவம்)

**விலை ரூபாய் 1,** **தபால் செலவு தனி.**

கிடைக்குமிடம்:

**பகுத்தறிவுப் பாசறை**

147 பவழக்காரத் தெருவு :: சென்னை.


## புலவர்கள் கொட்டிய போர் முரசு!

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

புலவர்களின் குறைபாடுகளை இடித்திடித்துக் காட்
னர், கன்பாடிகளுடன் கூட்டுறவு கொண்டிருக்கிறீ
களே இது தகுமா, முறையா, ஆகுமா என்று அடு
கடுக்காக வார்த்தைகளை வீசினர், அடிமேல் அ
அடித்தால் அம்மியும் நகருமல்லவா, திடீரென
ஓர் நாள் கிழக்கு வெளுத்தது, பகுத்தறிவு
கதிரவன் சிகப்பு ஒளி வீசினன், புதுமலர்ச்சி ஏற்ப
டது புலவர் உலகெங்கணும், புதியதோர் ஆர்வம்—
புதுமையில் நாட்டம்—புரட்சியில் பற்று—சீர்திருத்
சிந்தனை புலவர்தம் உள்ளத்தில் அலை மோதிற்று
புரட்சிப் புலவர்தம் கூட்டம் ஒன்று உருவாயிற்று
பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த இளம்புலவ
முன்னணி வளர்ந்தது, அவிலசியார்களும் கண்
அஞ்சும் அளவுக்கு வளர்ந்தது, பெரியார் உள்ளத்தி
களிப்பு பிறக்கும் அளவுக்கு வளர்ந்தது, சுயமரிய
தைக்காரர்கள்தான் புலவர்களாக ஆயினரா அல்ல
புலவர்கள்தான் சுயமரியாதைக்காரர்களாகமாறினர
எது நடந்தது—எப்படி நடந்தது என்பதைக் கூட
கண்டறிய முடியாத அளவுக்கு வளர்ந்தது, அந்
வளர்ச்சியின் முழு உருவம்தான் மெமோரியல் மண்
டப மாநாடு.

ஒவ்வொரு புலவரும் ஒரு தீப்பந்தம் இன்று! நாமல
கூறுவது, அவிலசியார்! அவர் கூறுகிறாராம், யா
புலவர்கள் யார் சுயமரியாதைக்காரர்கள் என்
தையே கண்டறிய முடியவில்லையே என்று! கண்ட
றிய முடியாதுதான், முயல்வதும் வீண்வேலை, ஆனா
அந்த தீப்பந்தங்களுக்கு நெய் வார்க்கிறாரே அவிலசி
யார் கட்டாய இந்தித்திட்டத்தை நுழைப்பதன் மூலம்
அது மிகமிக ஆபத்தானது, அதைமட்டும் அவிலசி
யார் தெரிந்து கொண்டால் போதும்.

* * *

மெமோரியல் மண்டபத்தில், புலவர்கள் கொட்டிய
போர் முரசினைக் கேட்ட பின்னரும், மந்தமதி
படைத்த சர்க்கார் தம் முரட்டுப் பிடிவாதத்தைத்
தளர்த்த மறுத்தால், இன்றைய சர்க்கார், நாகரிகப்
பாதையிலிருந்து வழுவி நீண்ட நாட்களாகிவிட்டது
என்று பக்கிங்காம் மில் தொழிலாளர்கள் முதல் கம்யூ
னிஸ்ட் நண்பர்கள் வரை கூறிக்கொண்டிருக்கும்
குற்றச்சாட்டினை "ஆம், அது உண்மை" என்று சர்க்
காரே ஒப்புக்கொண்டதாக ஆகும், அதனை அறியட்டும்
சர்க்கார், அறிந்து ஆவன புரியட்டும்!


**திராவிடத் தோழர்களே!**

**'போர்வா'ளுக்குச் சந்தாதார் ஆகுங்கள்!**

ஆண்டுத் தொகை ரூ. 5. அரை ஆண்டு ரூ. $2\frac{1}{2}$


**தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்!**

# மூண்டுவிட்டது மொழிப் போராட்டம்!




**மறியல் காட்சி:** மாணவன் ஒருவன் உள்ளே போகிறான், மறியல் தொண்டர்கள் பணிவுடன் கூறுகின்றனர் "இந்தி வகுப்புக்குச் செல்லாதே தம்பி" என்று!



பத்து நாட்களாக மறியல் செய்துவரும்
**தோழியர் தனலட்சுமியார்**
[அவர் மகன் 5 வயது
திராவிடமணியுடன்]





போர்வாள்

21—8—48 சனிக்கிழமை

# இரண்டாவது ஆண்டு

•வடநாட்டுக் கலாசாரப் படை
யெடுப்பினின்று தமிழகத்தை மீட்
பதற்காக, ஆண்மைத் தமிழர்கள்
அடலேறுகளென ஆர்த்து நின்று,
அஞ்சாத நெஞ்சுடன் அறப்போர்
நடாத்தி வரும் இந்த அரிய நேரத்
தில், "போர்வாள்", தன் இரண்
டாவது ஆண்டைத் தொடங்கு
கிறது. புத்தாண்டுத் தொடக்கம்
ஓர் அரிய போராட்டமாக இருப்
பதைவிட, ஒரு போர்வாளுக்கு,
மகிழ்ச்சி தரக்கூடிய சூழ்நிலை
வேறென்ன இருக்க முடியும்?

நமது "போர்வாள்", போருக்
கான ஓர் வாள் என்பது மட்டு
மல்ல, போரை விரும்பி வரவேற்
கும் பண்புடைய வாளாகும்.
போரை விரும்பி வரவேற்கும்
வாள் என்பது மட்டுமல்ல, போர்,
என்று வருமு என்று வரும் என்று
எத்தனையோ நாட்களாக ஏங்கித்
தவித்துக்கொண்டிருந்த வாளாகும்.
போர்ப்பசி மிகக் கொண்டு, போர்
போர் என்று துடிதுடித்துக்
கொண்டிருந்த தூய்மை சேர் வாள்
என்பது மட்டுமல்ல, அதிகார
மமதை கொண்ட ஆணவக்காரர்
களின் ஆதிக்க வெறி எங்கெங்கே
கொடிகட்டி வாழ்கிறதோ, வர்ணாஸ்
ரமம் எனும் விபரீத விஷம்
படைத்த விரியன் பாம்புக் குட்டி
கள் எந்தெந்தக் கானகத்தில்
மறைந்து மறைந்து ஊர்கின்ற
னவோ, ஆயிரம் ஆயிரம் ஆண்டு
களாக 'அடம்' செய்யும் வைதீகம்
எந்தெந்த வட்டாரத்தில் தன்
கூடாரம் அடித்திருக்கிறதோ,
பிரிட்டானியத்தின் மூத்த தோழ
னை பார்ப்பனீயத்தின் 'பிடி' எந்
தெந்தப் பகுதிகளில் எந்தெந்த
அளவுக்கு இருக்கிறதோ, அந்தந்த
இடத்திலெல்லாம் சென்று சென்று
அறப்பணி ஆற்ற அஞ்சாது முன்
வந்த வாள் நமது வாள். எனவே
தான் போர் வந்தது கண்டு, வந்த
போர் அறப்போராக அமைந்தது
கண்டு, அந்த அறப்போரும் செந்
தமிழர் பண்பாட்டிற்கு வந்த இடை
யூற்றை வேரோடு கல்லியெறியும்
வீறு நிறைந்ததாய் விளங்கக்
கண்டு, இத்தகு போராட்டத்தில்
ஈடுபட்டுப் பணியாற்றும் பெருமை
யும் உரிமையும், கடமையும்
வாய்ப்பும் தனக்கு ஏற்பட்டது
கண்டு, மட்டற்ற மகிழ்ச்சி அடை
கிறது "போர்வாள்". அறப்
போருக்கென்றே வடித்தெடுக்கப்
பட்ட நம் வாள் அறப்போர் வந்
தது கண்டு ஆநந்தப்பள்ளு பாடு
வதிலோ களிப்புச் சிந்தனை செந்
தமிழ் மெட்டில் இசைப்பதிலோ
என்ன தவறு?

சென்ற ஓராண்டாக, செந்தமி
ழகம் முழுவதிலும், தமிழின்
இனிமை பரவி இருக்கும் ஈழநாடு,
மலேயா, பர்மா, தென்னாப்பிரிக்கா
போன்ற வேற்று நாடுகளிலும்
ஓயாது சுழன்று சுழன்று பகுத்
தறிவுப் பணி ஆற்றியிருக்கிறது நம்
"போர்வாள்."

நமது வாள் நியாயத்திற்காகப்
போராடி இருக்கிறது, நேர்மைக்
காகப் போராடி இருக்கிறது, உயர்
தமிழுக்காகப் போராடி இருக்
கிறது, மடமையை வீழ்த்தவும்,
மமதையைச் சாய்க்கவும் பழமை
யைப் பொசுக்கவும் பழங்கால
பித்தினைத் தொலைக்கவும் மீண்டு
மீண்டும் போராடி இருக்கிற
ஆளவந்தார்களின் ஆணவச்செய
களை அவ்வப்போது அணுவளவு
அஞ்சாதுஎடுத்துக்காட்டவும், அ
ஆணவச் செயல்களை வீழ்த்த ந
அருந் தலைவர்கள் திட்டங்க
தீட்டியபோது அவற்றிற்காக ம
ளிடம் பேராதரவு திரட்டவும், ஆ
ரவை அளித்துவரும் மக்கள் உ
ளத்தில் இடையிடையே மின்
மறையும் ஐய வினாக்களுக்கு
செவ்வன் இறை இறுக்கவு
போர் முரசு கொட்டப்பட்ட
படை வீரர்களை வருக வருக எ
வாழ்த்தி வரவேற்று நல்லதே
அணிவகுப்பில் அவர்களை ந
முறையில் நிறுத்தவும் "போ
வாள்" ஒருபோதும் தயங்
றில்லை. நாட்டுக்குக் கேடு த
திட்டங்களை—அவை எக் க
மேடையிலிருந்து குதித்தோடி
திருந்தாலும் சரியே, அவற்றை
தீட்டிய தலைவர்கள் மக்கள் உ
ளத்தில் குடியேறிவிட்ட மகத்தா
பெருமை படைத்தவராயினு
சரியே—அவ்வப்போது அம்ப
திற்கு இழுத்துவந்து அவற்
சவக்குழிக்கு அழைத்துச் செ
வும் சற்றேனும் அஞ்சியதில்
"போர்வாள்".

இது அல்லவோ வாள் என
போற்றிப் புகழ்ந்தவர்கள்
இதென்ன இரும்புத் துண்டு என
இழித்துப் பழித்ததுண்டு, நெடுந
நண்பர்கள் திடீர்ப் பகைவர
துண்டு, உள்ளன்புடன் உவ
மொழி புகன்றவர்கள் உதட்டெ
சலுடன் உறுமிப் பாய்ந்ததுண்
நமக்குக் கைகொடுத்துத் து
விடுவார்கள் என்று எண்ண
பட்டவர்கள் காலடியில் குழி ப
கும் கயவர்களாக மாறியதுவ
அணைத்து மகிழவேண்டிய
கள் அனல் கட்டிகளை எடு
வீசியதும் நடந்ததுண்டு, இவ்
வும் இதற்கு மேலும் நடந்தி
கிறது, என்றாலும், "போர்வா
தான் மேற்போட்டுக் கொ
பணியினின்று சிறிதும் பிற
தில்லை, சற்றேனும் தவறியதி
"கீழ் வெட்டு" புரிந்ததி
குறுக்குச் சால ஓட்டியதுமி
கோணல் மொழி புகன்றதி

## தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்

வறியும் விஷ விதைகளைத் தூவிய ில்லை, "என் கடன் பணி செய்து டப்பதே" என்னும் மொழி ன்றையே தன் பயணத்தின் வழி ாகக் கொண்டு, அலுப்புச் சலிப் ின்றி, சோர்வு சோகமின்றி, ாய்தல் உவத்தல் இன்றி, வேண் யவர் வேண்டாதவர் எனும் பாகு ாடு பாராது அறப்பணி ஆற்றி ிருக்கிறது இது நாள் வரை—இனி ும் ஆற்றத் தயங்காது.

"போர்வாள்" தன் பயணத் தைத் தொடங்கியபோது முறைத் ப் பார்த்தவர்களும் முணு ணுத்தவர்களும் பலருண்டு. தம்பீ, பயங்கரமான பாதை, ாட்டு வழி, கொடு விலங்குகள் ராளம், போகாதே இந் நெறி ில்" என்று உபதேச காண்டம் டித்தவர்களும் இருக்கிறார்கள். ஆபத்தான பயணம்—விநாடிக்கு நொடி சர்க்காரின் ஈட்டி முனை திர் நோக்கிப் பாயும்—விஷப் ரீட்சை ஏதுக்கு, வீண் வம்பு ன்னத்திற்கு" என்று அன்புடன் ஆலோசனை கூறிய உண்மை நண் ர்களும் இல்லாமல் இல்லை. மூன்றே வாரங்களில் முடங்கிவிடும் போர்வாள் என்று ஆரூடம் கணித் தவர்களும், 'அது சரி' என்று லை அசைத்தவர்களும், ஆமாம் வேறென்ன என்று பக்க வாத்தி ம் வாசித்தவர்களும் பற்பலர். அவர்கள் அனைவரும் கூறியதில் தவறுமில்லை. தன்மான இயக்கம் ாட்டிலே தவழவிட்ட ஏடுகள் இந்த இருபத்தைந்து ஆண்டுகளில், எண்ணிப் பார்த்தால் ஏராளமாக இருக்கும். ஆனால் நின்று நிலைத் தனவோ ஒரு நான்கைந்து கூட இல்லை. நமது பணி அத்தகையது. நமக்கோ நாடெங்கும் விரோதிகள். நாடெங்கும் மட்டுமா, நமது வீட்டி லேயே கூட உற்றார் உறவினர்கள் நமக்குப் "பகை". அண்ணன் தம்பிகள் நம்மிடம் "பேசமாட் டார்கள்". மாமன் மைத்துனர் கட்கு நம்மைக் கண்டால் "ஆகாது". ஈன்றெடுத்த தாயும் கூட "இவனென்ன சூனுமானு" ன்று சலிப்புடன் பேசுவது சர்வ ாதாரணமான காட்சி! அன் ள்ள தந்தையர்க்கோ நாம் "தறு தலைப் பிள்ளைகள்!" நாலாபுறமும் "வேண்டாமடா கண்ணே" என் றுரைக்கும் சொற்கள்! இவ்வள வுக்குமிடையேதான் நாம் நம் முடைய பயணத்தைத் தொடங்க வேண்டும். தொடங்குவதே கஷ் டம். தொடங்கினாலும், வெளியே, வணிகத் துறையில், காகித 'மார்க் கட்டில்', விளம்பர 'இலாகா'வில், 'சர்க்கார் மாளிகை'யில், அஞ்சல் அலுவலகத்தில், ஓவியர் உருவத் தில், ஒவ்வோரிடத்திலும், ஆரியம், அமர்ந்துகொண்டு நம் ஏடுகளை மேலேற ஒட்டாது தட்டி வீழ்த்துவ தில் கண்ணும் கருத்துமாயிருக்கும். நாமோ "உலகத்தோடு ஒட்ட ஒழுக" அறியாதவர்கள்! "கும்ப வில் கோவிந்தா" போடத் துணி யாதவர்கள்! உள்ளொன்று வைத் துப் புறமொன்று பேசும் உயர் கலையைக் கற்றுத் தேறாதவர்கள், நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு சொல்லிவிடும் "பலவீனம்" படைத்தவர்கள், இங்கொருவிதம் அங்கொரு விதமாகப் பேசவோ ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு 'மா திரி' உரையாடவோ, சமயத் திற்கேற்ற மாறுவேடம் பூணவோ, காலத்திற்கேற்ற கோல மதைக் கொள்ளவோ நமக்குத் தெரிவதுமில்லை, நமக்கு அது விருப் பமுமில்லை, எனவே விரோதிகள் நமக்கு ஏராளம, நம் ஏடுகள் பல விழுந்துவிட்டதும் இதனால்தான்.

என்றாலும் "போர்வாள்" எப்ப டியோ ஓர் ஆண்டைக் கடந்துவிட் டது. தன் இலட்சியப் பாதையி லிருந்து சிறிதும் வழுவாமலும், உண்மையை உரைப்பதில் சிறி தும் தவறாமலும், பெரியாரின் பெருந் தொண்டில் இரண்டறக் கலந்து நின்று பணியாற்றுவதில் சிறிதும் பின்னிடாமலும், திராவிட நல் திருநாட்டின் இற்றைச் சிறுமை தொலையவும் உரிய சிறப்பு ஓங்கவும் ஓயாதுழைப்பதில் ஒரு போதும் சலிப்புத் தெரியாமலும், தொடர்ச்சியாக, ஆற்றி வந்த பணி ஒன்றே போதும் போர்வாளுக்கு "இயற்கை முடிவு" எய்துவிக்க என்றாலும், அத்தகைய இடையீ டற்ற பகுத்தறிவுப் பணி புரிந்த காரணத்தாலேயே நமதியக்க ஏடு கள் பல சாய்ந்தன என்றாலும், "போர்வாள்" திராவிட மக்களின்

(10-ம் பக்கம் பார்க்க)

## இஸ்லாமியர் உலகின் மதிப்பீடு!

★

"போர்வாள்" போர்வாளேதான். திறன் அமைந்த படை யில் வாளேந்தும் சுத்த வீரனிடம் அமைந்த போர்வாள்போல் கிளம்பிவிட்டது பத்திரிகை உலகிலும் இப் "போர்வாள்!" பள பளவெனப் பிரகாசிக்கும் இவ்வாள், கூரிய, அழுத்தந்திருத்த மான, ஆணித்தரமான கருத்துக்கள் கொண்டது. வஜ்ரம் போன்ற எழுத்துக்கள் நிறைந்தது. கருத்துக்கும், மற்றும் பல வற்றுக்கும் பொருத்தமில்லா பெயரைத் தாங்கிய பத்திரிகைகள் சிலவற்றைப் போலல்லாது தனக்கேயென உரிமை பெற்றதே போல் போர்வாள் எனும் பெயரைத் தாங்கி இருப்பது.

தென்னாட்டில் போர்வாளுக்குப் பேராதரவு இருந்தே தீரும் என்பது மட்டுமின்றி, வீரர் ஏந்தும் வாள் என எல்லோர் கரங் களிலும் இது மிளிரும் என்பது உறுதி.

—நூருல் இஸ்லாம்.

**தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!**

# தமிழன் தொடுத்த தீரப் போர்!




முதல் சர்வாதிகாரி
**தளபதி அண்ணாதுரை**



பத்து நாட்களாக மறியல் செய்துவரும் அறப் போர் வீரர்கள்: **மேலே:** என். சுப்பிரமணியம், என். அனந்தப்பன், டி. டி. பாண்டியன், என். கிருஷ்ணன். **கீழே:** எஸ். நடராசன், கே. கண்ணப்பன், கலைச் செல்வன், ஜி. மாரியப்பன்.




இந்திப் போர்க் கேப்டன்
**சி. டி. டி. அரசு**



**பக்கத்தில்:**

**தொண்டை மண்டலம் பள்ளி:** மறியல் தொண்டர்களின் பணிவான வேண்டுதலுக் கிணங்க இரண்டு மாணவர்கள் தலைமையாசிரியர், சி.டி.டி. அரசு, தளபதி அண்ணா ஆகியோரையும் படத்தில் காணலாம். மறியல் எவ்வளவு அமைதியாகவும் உருக்கமாகவும் நடை பெறுகிறது என்பதற்கு இந்தப் படமே தக்க சான்று.



**மேலே:** மறியல் காட்சியைக் காணவொட்டாது மக்களைத் தடுக்கின்றனர் போலீஸ்காரர்கள்!



இதோ மற்றுமோர் மாணவன் வெளியேறுகிறன், வெளியேறுமல் வேறென்ன செய்வான்? செந்தமிழ்க் கனி இருக்க இந்தி எனும் எட்டிக்காயை எவர்தாம் உண்பர்?

**ஹிந்தி ஒழிக!**
**வடநாட்டுச் சுரண்டல் தொலைக!!**
**தமிழர் அறப்போர் வெல்க!**



**13—8—48:** சௌகார் பேட்டையில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம்! அடடாவோ அடடா! எத்தனை பெரிய கூட்டம்! எவ்வளவு அழகிய காட்சி!

## பத்திரிகைகள் பாராட்டுகின்றன!

தொடங்கிய சில மாதங்களுக்குள்ளாகவே பெரும் புகழ் எய்தியிருக்கிறது போர்வாள்......தமிழ் மக்கட்குச் சிறந்தவொரு வார வெளியீடு கிடைத்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்....ஆசிரியரின் தமிழ் நடை படிக்கப் படிக்க இனிமை பயக்கிறது; தமிழ் நாட்டிற்குச் சிறந்த எழுத்தாளர் ஒருவர் கிடைத்துவிட்டார் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது......போர்வாள் மேற்கொண்டுள்ள பணி வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

—"பொன்னி"

★

திராவிடர் அறிவுக்குக் கிடைத்திருக்கும் இந்த வாளைச் செப்பனிட்டுத் தருபவர் அப்பாவும் பிள்ளையும்! எவ்வளவு பெருமை நமக்கு! 12 பக்கங்கள் கொண்ட இதில் கார்ட்டூன் படங்களும், கற்பனைச் சித்திரங்களும், கல்வீச்சுப் போன்ற தலையங்கங்களும் கருத்தைக் கவரும் வகையில் வெளிவருகின்றன. நல்ல தமிழ் நடை. சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள்.

—"விடுதலை"

★

தமிழ் நாட்டின் இளைஞர்களைத் தட்டி எழுப்புவதற்கென்றே தோன்றிய வார வெளியீடு. போர்வாள் என்ற பெயரைக் கேட்டவுடனே பத்திரிகையின் போக்கு எத்தகையதாயிருக்குமென்பதை நேயர்களே அறிந்துகொள்ளலாம் ......தமிழன், போர்வாளைப் படிக்கத் தவறான்.

—செட்டிநாடு

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

தளராத ஆதரவு எனும் பாதுகாப்பு மதிலினைப் பெற்றிருக்கும் காரணத்தால், சுழன்றடிக்கும் இச் சூறுவளிகள் அத்தனைக்கும் தப்பி நிற்கிறது, ஓர் ஆண்டு என்னும் காலத்தை முடித்துவிட்டு, புதுக் கணக்கும் போடுகிறது. அதிசயம், ஆனால் உண்மை!

இப்போதும் கணக்குப் புத்தகத்தைப் பிரித்தால், அது, வேதனைப் பட்டியலாகத்தான் இருக்கிறது, ரூபா அணா பைசாக்களின் பட்டியலாக இல்லை. காரணம், பல ஏஜண்டுத் தோழர்களின் ஒத்துழையாமை! நாம் எத்தனை முறை வேண்டிக் கொண்டாலும் அவர்கள் "சாத்வீக சட்ட மறுப்பு"ச் செய்வதன்றி நம்முடைய இதழின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க மறுக்கிறார்கள். தஞ்சாவூர்த்தோழரொருவர்-அவர் பெயர் N. S. வாசன் என்றெண்ணுகிறோம்—ரூபா 300-க்கு மேல் நமக்கு பாக்கி! பொன்மலை, ஸ்ரீரங்கம், இலங்கை, திருநெல்வேலி முதலிய இடங்களின் முன்னாள் விற்பனையாளர்கள் நமக்குத் தந்திருக்கும் தொல்லை, வேதனையில் தோய்ந்த உள்ளத்தோடு கூறுகிறோம், மனித உள்ளம் படைத்த எவராலும் தாங்கக் கூடியதல்ல. மாதப் பட்டியல் கண்டதும் சில விற்பனையாளர்கள் "இறந்து" விடுகின்றனர்! சிலர், "அஞ்ஞாத வாசம்" ஆரம்பித்துவிடுகின்றனர், சிலர் "காணாது போய்விடுகின்றனர்", சிலர் ஊரைவிட்டே வெளியேறிவிடுகின்றனர்! "எண்பது ரூபாய்க்கு மேல் பாக்கி ஏறிவிட்டதே, இது நியாயமா?" என்று கேட்டதற்கு, ஒரு தோழர், "பெரியார் இராமசாமி காங்கிரஸ் தலைவராக இருந்த காலத்திலிருந்தே நான், கட்சிக்காக, உழைத்து உழைத்து உருக் குலைந்துபோயிருக்கிறேன், என்னைப் பார்த்து, நேற்றுவந்த நீர், இப்படிக் கேட்பதா?" என்று காரசாரமாக விடை அனுப்பினார்—ஆனால் ரூபா எண்பதை மட்டும் அனுப்ப "அலுவல் மிகுதி"யால் அவர் "மறந்து" விட்டார்! வேறொரு தோழர், அவர் குடந்தையின் முன்னாள் ஏஜண்டு, "பணம் மட்டும் கேட்கவேண்டாம் — பத்திரிகையை மட்டும் தவறாது அனுப்புங்கள்" என்று அழகியதோர் இலக்கியக் கடிதமே தீட்டிவிட்டார்! மற்றொரு தோழர்—ரூபா எழுபதுக்குமேல் பாக்கி—போட்ட கடிதங்களுக்குப் பதிலே இல்லை—அதிசயம் அது அல்ல! அவர் சென்ற மாதம் புதிய பத்திரிகையே ஒன்று ஆரம்பித்துவிட்டார்!

இத்தகைய விற்பனையாளர்கள் நம் உள்ளத்தை இவ் வண்ணம் கூரிய ஈட்டிமுனை கொண்டு குத்திக் குடைகிற இதே நேரத்தில், நம் மனம் களிக்கும் விதத்தில், **போர்வாள்** சிறந்து பொலியும் விதத்தில், ஓயாத தொல்லை நடுவேயும் தீராத இன்பம் பாய்ச்சும் விதத்தில், தாமே பணம் அனுப்பி, பத்திரிகை வளர, அதன் இலட்சியம் சித்திபெற, உறுதுணை புரியும் உள்ளன்புடைய விற்பனை நண்பர்கள், சென்னைத் தோழர் ஜி. என். சாமி அவர்களைப் போல, கோவை நண்பர் மீனாட்சிசுந்தரம் அவர்களைப் போல, பலர், பலப்பலர், இருக்கின்றனர் என்பதையும் நாம் கண்ணியமாக இங்கே குறிப்பிடுவதுதான் முறை.

இத்தகைய நண்பர்களின் ஒத்துழைப்பு, சோர்ந்து போகும் நம் உள்ளத்திற்குச் சுறுசுறுப்பைத் தரும் 'டானிக்' காக இருக்கிறது என்றால், வாசக நேயர்களின் பேராதரவு அற்புதமான "பெனிசிலின் இஞ்சக்ஷனை" இருந்து, நமக்குத் தளராத ஊக்கத்தையும் மென்மேலும் பெருகும் உற்சாகத்தையும் ஊட்டிடும் திறத்ததாய் இருக்கிறது. "தமிழர்களே, உங்கள் கரங்களில் தவழ்ந்து விளையாட இதோ வருகிறது "போர்வாள்", எடுத்துக் கொள்ளுங்கள்" என்று நாம் 16-8-47 ல் ஒரு சொல் புகன்றதுதான் தாமதம், அடுத்த வினாடி, திராவிட இளங் காளைகளின் கரத்திலெல்லாம் நம் வாள் 'பளிச்' 'பளிச்' என மின்னக் கண்டு நமக்கே திகைப்பும் வியப்பும் ஏற்பட்டது, அந்த அளவுக்கு திராவிட இளைஞர் உலகு போர்வாளிடம் 'கண்டதும் காதல்' கொண்டுவிட்டது. அது திடீர்க் காமமாக இருக்குமோ, சில பல்நாள் சென்ற

தமிழுக்கு அமுதென்று பேர்—அந்தத்

தும் மாறுமோ என்று நாம் ஐயுற்றதுண்டு, ஆனல் நாளடைவில், அது திடீர்க்காமம் அல்ல, உள்ளத்தின் உள்ளே ஆழப் புதைந்து கிடக்கும் உயரிய எண்ணங்களின் கூட்டுத்தொகைபோன்ற உத்தமக் காதல் என்பதைக் கண்டு கொண்டோம்.

திராவிட இளைஞர்கள், அதிலும் சிறப்பாக மாணவர்கள் உள்ளத்தில் என்றும் அழியாத அன்பு முத்திரையைப் பொறித்து விட்டது **போர்வாள்** என்று இன்று நாம் நெஞ்சு நிமிர்ந்து கூறமுடியும், ஏனெனில் அவர்களின் அன்புதான், ஆதரவு தான், நட்புணர்ச்சிதான், நல்லெண்ணம்தான், கைகொடுத்துத் தூக்கிவிடும் கூட்டுத்தோழமை உணர்ச்சிதான், இன்று, "**போர்வாள்**", இந்த அளவுக்காவது சிறப்புடன் விளங்குவதற்குரிய அடிப்படைக் காரணம் என்பது நமக்கு மட்டுமல்ல, அந்த இளைஞர்தம் இதயத்திற்கும் நன்கு தெரியும்.

"போர்வாள்", விளம்பர கேட்லாக் அல்ல, வியாபார ஏடுமல்ல, சீசனுக்கேற்ற சங்கீதம் பாடும் "ஆற்றலும்" அதற்கில்லை, அழகுக்கும் அலங்காரத்திற்கும் அதிக நேரம் செலவிடவும் அதனல் முடியவில்லை, அவை இரண்டும் அதற்கு அவ்வளவாகத் தேவையுமில்லை, வாளின் திறமை, அதன் கூர்மையைப் பொறுத்ததே தவிர அழகைப் பொறுத்ததல்ல, அந்தக் 'கூர்மை' இருக்கிறது நம் வாளுக்கு, அது போதும் நமக்கு! ஏனெனில் நம் வாள் வியாபாரப் பண்டமல்ல, இலட்சிய ஏடு! வளமார் நமது திராவிட நாடு எடுப்பார் கைப்பிள்ளையாக ஆனது கண்டு நெஞ்சங் கொதித்தெழுந்து போராடும் **திராவிடர் கழகம்** எனும் தீப்பந்தத்தில் சிதறி வீழ்ந்த ஒரு சிறு பொறி நம் ஏடு. இந்தச் சிறு பொறி, அந்தப் பெருந் தீயின் ஒளி தமிழகத்திற்கு எவ்வளவு அவசியம் என்பதனை எடுத்துக் காட்டும் உயரிய இலட்சியத்தையே தன் இருதய கீதமாகக் கொண்டிருக்கிறது.

திராவிடர் கழகம் சுயமரியாதை இயக்கத்தின் புது வடிவம்! சுயமரியாதை இயக்கமோ ரூசோவையும் வால்டேரையும் புருனேவையும் ஷெல்லியையும் காரல் மார்க்சையும் வால்ட்விட்மனையும் ஏஞ்சலையும் இங்கர்சாலையும் தமிழகத்திற்கு அழைத்துவந்த மகத்தானதோர் புரட்சி சக்தி. உலகத்தில் என்னென்ன புரட்சிக் கருத்துகள் உண்டோ அவை அத்தனையையும் தொகுத்துவைத்து கூட்டி எடுத்தால் வருகிறதே கூட்டுத் தொகை, அதன் பெயர்தான் சுயமரியாதை இயக்கம். அந்தப் புரட்சி இயக்கத்திற்கான புரட்சி ஏடு, "போர்வாள்." எனவே அது "என்றும் சிரஞ்சீவி"யாக இருக்கமுடியாது என்பதும், அதிகார வர்க்கத்தின் கழுகுப் பார்வைக்கும் பருந்துப் பாய்ச்சலுக்கும் தப்பி அது நீண்ட நாட்கள் நிலைத்திருக்க முடியாது என்பதும், ஆளவந்தார்களின் "அன்பு" எந்த விநாடியிலும் போர்வாளின் சுழற்சிக்கு முற்றுப்புள்ளி விதித்துவிடக்கூடும் என்பதும் நமக்கு மிக மிக நன்றாகத் தெரியும். அதிலும் இப்போது நாட்டிலே மூண்டுள்ள கலாசாரப் போராட்டத்தின் வேகம் அதிகமாக ஆக, சர்க்காரின் அடக்குமுறைத் தாகம் மேலும் மேலும் பெருகும், பெருகினல், **போர்வாள்** போன்ற ஏடுகளின் கழுத்து சர்க்காரால் துண்டிக்கப்படாது என்று யார் உறுதி கூறமுடியும்?

எது எப்படியானலும் ஒன்றுமட்டும் உறுதி. ஆபத்துகள் ஆயிரம் ஆயிரம் அடுக்கி வந்தாலும், **போர்வாள்**, தன் இலட்சியப் பாதையிலிருந்து இம்மியளவும் வழுவாது. உண்மையை உரைப்பதற்கு—அந்த உண்மை ஊராள்வோருக்கு எட்டியெனக் கசந்தாலும்—ஒரு சிறிதும் தயங்காது. வையமே எதிர்த்துவந்தாலும் தன் உள்ளம் உணர்த்துவதை உரத்த குரலில் ஊருக்கு உரைத்திட அஞ்சாது, அஞ்சாது. ஆம், போர்வாள் அஞ்சுவது யாதொன்றுமில்லை, இனி அஞ்சவருவதுமில்லை!

போர்வாளைத் துவக்கிய ஞான்று நாம் இதைத்தான் கூறினோம். இன்று, புத்தாண்டில் புகும்போதும், இதைத்தான் கூறுகிறோம். இனியும் என்றென்றும் இதைத்

(3-ம் பக்கம் பார்க்க)

## மதிப்புரைகள் குவிகின்றன!

போர்வாள் எல்லாத் துறைகளிலும் மேன்மையாக உணர்ச்சியூட்டத்தக்க அரிய கட்டுரைகளுடன் விளங்குகிறது.........நல்ல விறுவிறுப்பான தமிழ்நடை......திராவிடர் அனைவராலும் ஆதரிக்கப் படவேண்டிய பத்திரிகை.

—கதிரவன்

★

ஆராய்ச்சிக்கான சிறந்த கட்டுரைகள் கொண்ட திராவிடர் வார வெளியீடு...திராவிடனுக்கும் போர்வாளுக்கும் ஒரே போர்முனை. அந்த முனையில் "திராவிடன்" போர்வாளைஏந்தியும், "போர்வாள்" திராவிடனுக்கு உறுதுணை புரிந்தும் போர் புரியும் என்பது உறுதி.

—திராவிடன்

★

தகப்பனரும் பிள்ளையும் ஆசிரியர்களாக இருந்து இப்பத்திரிகையை நடத்துவது மகிழ்ச்சிக் குரியது......தலையங்கப் பகுதியிலுள்ள தமிழ் நடை நன்ருக இருக்கிறது.

—பிரசண்ட விகடன்

★

போர்வாள், திராவிடர் நலத்திற்கே போராடுவதென்று சூள் உரைத்திருக்கிறது. அதோடு, இதில் வெளிவரும் கட்டுரைகள் சிந்தனைச் செல்வம் செறிந்தனவாய் இருக்கின்றன. ஆதலின் ஒவ்வொரு திராவிடரும் இதனை ஆதரித்தே தீர வேண்டியது அவர்கள் கடமை......முன்னணியில் நிற்கும் தலைசிறந்த வாரவெளியீடுகளில் இது ஒன்று ஆதலின் இதனை அவசியம் படிக்க வேண்டுமென நம் வாசகர்கட்கெல்லாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.


—நியூ ஜஸ்டிஸ்



ஐயோடா! எவ்வளவு தூரத்திற்கு எவ்வளவு தூரம் மறியலுக்கு இடம் ஒதுக்கியிருக்கின்றனர் போலீஸ் தோழர்கள் !



படைவீரர்கள் புடை சூழச் செல்கிறார் தளபதி !



**இந்தி ஒழிக என முழங்குகிறது மாணவர் பட்டாளம் :** தொண்டை மண்டலம் பள்ளி மாணவர்கள் ஏராளமான பேர் கட்டாய இந்தியைத் தவிடுபொடியாக்குவோம் என்ற வீர முழக்கத்துடன் பள்ளிக்குள் நுழைகின்றனர் !



'இந்திப் போர்தானே, ஆகா தயார்' என்கின்றனர் வீரத் தாய்மார்கள் ! கீழே உட்கார்ந்து கொண்டு நகைப்பை முழக்குகிறார்களே அவர்கள்தான் முன்னாள் போர்த்தலைவி **டாக்டர் தருமாம்பாள்** ! அவர்களுக்கு வலது புறம் நிற்பவர் **ஆர். நாராயணியார்**. இடது புறம் இருப்பவர் (மூக்குக் கண்ணாடியுடன்) **மலர்முகத்தம்மையார்** ! மூவரும் முன்பு இந்திப் போரில் சிறைபுகுந்தவர்கள் ! தோழியர்கள் சத்திய வாணிமுத்து, மறியலில் ஈடுபட்டுள்ள அலர்மேலு அம்மையார் முதலானோரையும் படத்தில் காணலாம்.

[படப்பிடிப்பு : பாவலர் அப்துல்காதர்]

## புலவர்கள் கொட்டிய போர் முரசு!

ஆகஸ்டு 10! ஆற்றல் மிக்க தளபதி **அறிஞர் அண்ணா**வின் தலைமையில் அறப்போர் ஆரம்பமான நாள்!

ஆகஸ்டு 14! சங்கத் தமிழ் பயின்ற செந்தமிழ்ப் புலவர்கள் பாட்டு மொழியாலே போர் முரசு கொட்டிய நாள்!

10 க்கும் 14 க்கு மிடையே அதிக வேறுபாடு கிடையாது, எப்படி இருக்கும்?

**ஆகஸ்டு 10,** திராவிடர் கழகம் போர் தொடங்கி விட்டது என்பதனை அறிவிக்கும் அதிர்வேட்டு! **ஆகஸ்டு 14,** புறநானூற்றைப் பயின்று பயின்று போர்க் கோலம் பூண்டுவிட்ட புலவர் பெரு மக்கள் போர் தொடுக்கத் துணிந்துவிட்டனர் என்பதனை ஆளவந்தார்கட்கு எடுத்துக் கூறிடும் அபாய அறிவிப்பு! திராவிடர் கழகம் போர் தொடங்கி விட்டபிறகு, அந்தப் போர் அழகு தமிழுக்கு வந்த ஆபத்தைக் களைவதற்காக என்பது திட்டவட்டமாகத் தெரிந்தான பிறகு, சங்கத் தமிழிலே பிறந்து, சங்கத் தமிழிலே வளர்ந்து, சங்கத் தமிழையே பேசி, சங்கத் தமிழையே எழுதி, சங்கத் தமிழுக்காகவே வாழ்ந்து, சங்கத் தமிழாகவே மாறிவிட்ட தமிழ்ப்புலவர் பெருமக்கள், தாம் உண்டு, தம் தொழில் உண்டு என்று வறிதே கிடப்பர்? தமிழின் சிறப்பை சீலத்தை, தமிழ்க் கலைகளின் இன்பத்தை நல்லழகை, புலவர்களிடமிருந்து கற்றுத் தெளிந்த திராவிடர் கழகத் தீரர்கள் வண்தமிழ் காக்க வரிப்புலிகள் என எழுந்தபோது, தமிழருமையை அவர்கட்கு எடுத்துரைத்த அறிஞர்கூட்டம் தன் கையிருப்பைக் காட்ட எங்ஙனம் எழாதிருக்க முடியும்? எப்படிப் புலவர்களால் எலி எனத் தம்மை இகழ்ந்தவர் நடுங்க புலி எனச் செயல் செயப் புறப்படாதிருத்தல் இயலும்? அரசியல் தலைவர்களும் புரட்சித் தொண்டர்களும் சுயமரியாதை இளைஞர்களும் சீர்திருத்தப்போக்கினரும் அரசாங்க அலுவலரும் பெருவணிகத் திறத்தினரும் தொழில் துறை நண்பர்களும் இன்ன பிற தோழர்களும் முத்தமிழ் முன்னணி அமைத்திட முந்திடும்போது தமிழின் செல்வர்கள்—தமிழத் தொண்டர்கள்—தமிழ் இளங் கன்றுகள்—தமிழ்க் கலைவாணர்கள் என் கருதி வாளா இருத்தல் கூடும்? எனவே தான் 10 வந்ததும் 14ம் வந்தது. 10க்குத் தெரியும் 14 மிக விரைவில் வந்தே தீருமென்று. 14க்கும் தெரியும், 10, போருக்கு வந்த பிறகு, தான், செருக்களம் நோக்கிச் செல்லாதிருக்க முடியாதென்பது! இத்தகு நிலையில் "ஆகஸ்டு 10" நடந்து முடிந்ததும் "ஆகஸ்டு 14" ஆரம்பமானதில் சற்றேனும் வியப்பில்லை அல்லவா?

ஆகஸ்டு 10—வீரத்தின் சின்னம்.
ஆகஸ்டு 14—புலமையின் தோற்றம்.
வீரமும் புலமையும் கூட்டுத் தோழர்கள்தானே!
ஆகஸ்டு 10, அஞ்சாமையின் அடையாள அறிகுறி.
ஆகஸ்டு 14, முத்தமிழின் இடி முழக்கம்.

தமிழின் தனிச் சிறப்பு அதன்பால் பொங்கித் ததும்பும் அஞ்சாமைப் பண்பாடுதானே!

ஆகஸ்டு 10 வடநாட்டுக் கலாசாரப் படையெடுப்பை முறித்து வீழ்த்தும் நாள்.

ஆகஸ்டு 14, சங்கத்தமிழுக்கு, ஆட்சித் தலைவர்களால் வந்த அபாயத்தை அழித்து ஒழிக்கும் நாள்.

வட நாட்டுக் கலாசாரப் படையெடுப்பு முறியடிக்கப்பட்டால் முத்தமிழுக்கு வந்த ஆபத்து கதிரவன் முன் மூடுபனி எனக் கரைந்து போகாதோ?

10 க்கும் 14 க்கும் உள்ள முக்கியமான தொடர்பு எவ்வளவு அழுத்தமானதும் அருமையானதும் என்பது 10 ஐக் கண்டு, 14 ஐயும் கண்டவர்க்கு அழகுறத் தெரிந்துவிட்டது.

ஆகஸ்டு 10–ல் மறியல் தொடக்கமாயிற்று.

ஆகஸ்டு 14-ல் புலவர்கள், தங்கள் மாநாட்டில், **தமிழர் பிரான் இராமசாமிப் பெரியாரின்** முன்னிலையில், சூள் எடுத்துக்கொண்டனர், மூன்று மாதங்களுக்குள், வந்த இந்தி போகவில்லையேல் போர் தொடுத்தே தீர்வதென்று!

14-8-48-ல் சென்னையில் மெமோரியல் மண்டபத்தில் **புலவர் அருணகிரிநாதர்** தலைமையில் கூடிய சென்னை மாநிலப் புலவர்கள் மாநாடு முடிக்த முடிபாகச் செய்திருக்கும் தீர்மானம், போர்க்களம் புகுந்தேனும் அவினாசியார்களால் தமிழுக்குநேரும் ஆபத்துகளை அழித் தொழிப்பது என்பதுதான்!

*   *   *

**மாநாட்டுத் தீர்மானம்:** "1. தற்போது வகுக்கப் பட்டுள்ள கல்வித்திட்டம் மாணவர் நலத்திற்குக் கேடு சூழ்வது; கருத்தற்றது; கருத்துள்ள எவராலும் ஏற்க முடியாதது.

"2. அரசியலார் வகுத்துள்ள தமிழ்ப் பாடத் திட்டம் தவறானது; தவறான விளைவுகளைத் தவறாமல் தரக் கூடியது. ஆகவே அதனைத் தமிழகம் ஏற்காது.

"3. பெயரளவில் தமிழை முதன் மொழியாக்கியதாக அரசியலார் பறைசாற்றி வந்தாலும், உண்மையில் தமிழுக்கு உரிய இடம் துரைமார்கள் காலத்தைவிட குறைந்தேவிட்டது. அன்று, தமிழுக்கு 8 பீரியட்; இன்று, அவினாசியார், அருந்தமிழ் மீது அளவற்ற காதல் கொண்ட காரணத்தால், அருள்கூர்ந்து அளித்திருப்பது 4 பீரியட்! இது கூடாது! தமிழுக்கு குறைந்தது வாரத்தில் 10 பீரியடாவது ($7\frac{1}{2}$ மணி நேரமாவது) தரப்பட்டாக வேண்டும்.

"4. வேண்டாத—இந்நாட்டுச் சிறுவர்கட்கு ஏலாத இந்தி மொழியைக் கட்டாய மென்றும் விருப்பமென்றும் பல்வேறு பெயர் கூறி பள்ளிச்சிறுர் மீது சுமத்துவது, நாட்டை, மக்களை, தமிழை அழிக்கச்செய்கின்ற அறக் கொடுஞ் செயல்! ஆதலின், உடனடியாக, இந்தி, பள்ளித் திட்டத்திலிருந்து கத்தரித்தெடுக்கப் பட்டாக வேண்டும்.

"5. ஆங்கிலம் முதலான பிறபாட ஆசிரியர்கட்குத் தரப்படும் ஊதியமே தமிழாசிரியர்க்கும் தரப்பட வேண்டும்.

**இன்பத் தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!**

**"இந்த ஐவகைக் குறைகளும் குறைந்து மூன்று திங்களுக்குள் நிறை செய்யப்படாவிடில் நடவடிக்கை எடுக்க இம் மாநாடு, தமிழ்ப் புலவர் தலைவர் அறிஞர் மயிலை சிவ முத்து அவர்கட்கு முழு உரிமை தருகிறது."**

* * *

புலவர்கள், தங்கள் பாசறைக் கூட்டத்திற்கு, தலைவர் பெரியார், தமிழ்த்தென்றல்—திரு. வி. க, நண்பர் ம. பொ. சி, விடுதலை ஆசிரியர் குருசாமி, டாக்டர் கிருஷ்ணசாமி, தோழர்கள் அன்பழகன் நெடுஞ்செழியன் ஜனார்த்தனம், போன்ற பலரையும் அழைத்து அவர்தம் ஆய்வுரை கேட்டனர். அன்பு கணபதி. ம. இராசமாணிக்கம், அ. மு பரமசிவானந்தம், மோ. அ. துரை அரங்கனார், அழகுவேலன், திருமாவளவன், முடியரசன், புலவர் முத்தையன் போன்ற புலவர்கள் பலரும், தங்கள் பழம் பெருந் தலைவர் மயிலை சிவ. முத்து அவர்களின் தலைமையில், மாநாட்டுத் தலைவர் அருணகிரிநாதர் முன்னிலையில், மாநாட்டிற்கு வந்த தமிழர் தலைவர்கள் தளபதிகளின் ஆய்வுரை கேட்டபின்னர், போர்ப் பாதை வகுத்தனர். இமயம் வென்ற இன்பத் தமிழ் வெல்க என முழங்கினர். போர்க் களக்காதை தொடங்கினர்.

* * *

காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை மாநாட்டு மண்டபம் புலவர்கள் கொட்டிய போர் முரசால் அதிர்ந்த வண்ணம் இருந்தது. "அமைச்சரே, வேண்டாத இந்தியை வெட்டிக் குழியில் தள்ளிவிடும்" என்று ஆக்ரோஷத்தோடு பேசிய **தலைவர் அருணகிரிநாதர்** முதல் ஒவ்வொரு புலவரும், ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு பேச்சாளரும் சுவைமிக்க செந்தமிழில் வீரத்தைப் பிழிந்தெடுத்து அள்ளி வீசினர் என்றால் அது மிகையாகாது. காலையில், மாநாட்டு மண்டபத்திற்குள் நுழைந்தபோதே, **வரவேற்புத் தலைவர் மயிலை சிவ. முத்து அவர்கள்,** போர் தொடங்கி விட்டது—புலவர்களே திரண்டு வாருங்கள் என்று போர் முரசு கொட்டிவிட்டார். பிறகு வந்த ஒவ்வொருவரும் அறப் போர் தவிர வேறு எது பற்றியும் பேசினாரில்லை. புலவர்கள், பாட்டு மொழியாலே, போர்ப் பரணி பாடிக்கொண்டிருந்த நேரத்தில் எல்லாம், **அந்த ஈரோட்டுப் போர்வீரர்,** புன்னகை தவழும் முகத்தோடு வெண் தாடியை அசைத்த வண்ணம் வீற்றிருந்தார். இறுதியில், மாலை நேரத்தில் அவர் பேசத் தொடங்கியதும், தென்றல் வீசுகிறது என்று பூரித்தனர் புலவர்கள், ஆனால் வீசியது தென்றல் அல்ல, புயல்! புரட்சிப் புயல்! புயலும் தென்றலாகத் தெரிந்தது புலவர்கட்கு! காரணம், புலவர்கள், சீர்திருத்தச் சிங்க ஏறுகளாக மாறிவிட்டனர் இந் நாள்! பழமைப் பித்தர்களாக இல்லை முன்போல!



புலவர் தலைவர்

**மயிலை சிவ. முத்து**

தமிழாசிரியர் மாநாடு, நேரடி நடவடிக்கை எடுப்பதற்கான முழு அதிகாரத்தையும், இவருக்களித்திருக்கிறது.

புலவர்கள், வரிசை வரிசையாக! அவர்கள் நடுவே அரிமா நோக்குடன் கம்பீரத் தோற்றத்துடன் புரட்சித் தலைவர் பெரியார்! புலவர்கள் பேச்சை புன்சிரிப்புடன் பெரியார் கேட்கிறார், பெரியார் பேருரையை ஆவலுடன் செவிமடுக்கின்றனர் புலவர்கள். அற்புதமான காட்சி! அருமையான நிகழ்ச்சி!

இது 10-8-48ல்! ஆனால்முன்னர் ஓர் காலமிருந்தது, புலவர்கள்—அப்போது அவர்கட்குப் புலவர்கள் என்று கூடப்பெயரில்லை, வித்வான்கள் என்று பெயர்!—எங்கேனும் ஓர் பாழ் மண்டபத்தில்கூடி, பெரியார் மீதும் அவர் தலைமையில்ஈண்டி நிற்கும் பகுத்தறிவுப் படை வரிசைமீதும் வசைமாரி பாடி, கம்பராமாயணத்தின் கருப்பொருளுக்கு விருத்தியுரை கூறி, பாகவதபுராணத்திற்குப் பதினெட்டு தத்துவார்த்தம் புகன்று, பழமைக்கும் பத்தாம் பசலித் தத்துவங்கட்கும் பொய்ப் புராண ஏடுகட்கும் புரட்டர் தம் பொய்யுரைக்கும் "ததாஸ்து" கூறிவிட்டு மலைந்த நாட்கள்! அந்த நாட்கள்தான் பெரியார்புலவர்களை ஓயாது தாக்கிக்கொண்டிருந்த காலம்! வைதிகக் கோட்டையின்காவலர்களாக, பார்ப்பனியப் புற்றுக்குப் பால் வார்க்கும் புனிதர்களாக, சனாதனச்சழக்கர்கட்கு கூட்டுத்தோழர்களாகதொண்டர்களாக, புலவர்கள் இருக்கக் கண்டால் புத்துலகச் சிற்பி பெரியாருக்குக் கோபம் வராமல் இருக்குமா? வந்தது, வரவே பகுத்தறிவுக் குண்டுகளை அடுத்தடுத்து வீசினார் புலவர் கோட்டத்தின்மீது! பலர் ஏசினர் இவர்க்கென்ன பித்தமோ இப்படி ஓய்வு ஒழிவின்றி பண்டிதர்களைத் தாக்கித் தீர்க்கிறாரே என்று! கிடக்கிறார்கள் அக் குறைமதியாளர்கள் என்று கூறிவிட்டு பெரியார், தன் பணியைத் தொடர்ந்து நடத்தினார்.

(14-ம் பக்கம் பார்க்க)

தமிழுக்கு மணமென்று பேர் இன்பத்

# வாழ்க பக்தவச்சலனார் வாழ்க!

கடன்கார கந்தசாமி, தெருக்கோடியில், கடன் கொடுத்த முத்துசாமி வரக் கண்டான். கண்டதும் அவன் சிந்தனை வெகு வேகமாகச் சுழல ஆரம்பித்தது. தீர்ந்தது, தீர்ந்தது, இன்னும் இரண்டொரு விநாடிகளில் தன் வீட்டருகே வந்துவிடுவான். வந்ததும் தான் கொடுத்த எண்பது ரூபா எங்கே என்ற பழம் பல்லவியை இசைக்கத் தொடங்கிவிடுவான், எப்படித் தப்புவது இந்தத் தர்ம சங்கடமான நிலைமையிலிருந்து? எண்ணிப் பார்த்தான் கந்தசாமி. திடீரென ஒரு யுக்தி தோன்றிற்று அவனுக்கு! தன் ஏழு வயது பையன் ஏழுமலையை அழைத்து, "முத்துசாமி வருகிறான், நான் எங்கே என்று கேட்பான், நான் வீட்டில் இல்லை என்று சொல்லிவிடு" என்று கூறிவிட்டு தன் வீட்டிலுள்ள குதிருக்குள் புகுந்துவிட்டான்.

முத்துசாமி வந்தான். சிறுவன் ஏழுமலையைக் கண்டான்.

"அடே! உங்க அப்பா எங்கே"

"எங்க அப்பா குதிருக்குள் இல்லை!"

"என்னடா உளறுகிறே, உங்க அப்பா எங்கேடா?"

"இல்லிங்க. இல்லவே இல்லிங்க. எங்க அப்பா குதிருக்குள் இல்லிங்க."

சிறுவனின் பதில் முத்துசாமியின் சிந்தனைக்குச் சிறிய வேலை தந்தது, 'வேலை' விடையைத் தந்தது, முத்துசாமி குதிருக்குள் எட்டிப் பார்த்தான், பேந்தப் பேந்த விழித்தவண்ணம் வெளியேறினான் கந்தசாமி!

இது, நாம், சிறு பிள்ளைகளாயிருந்தபோது கேட்டுக் கேட்டுச் சலித்துப்போன பழங்கதை! காக்கையும் நரியும், சிங்கமும் சுண்டெலியும், ஓநாயும் ஆட்டுக் குட்டியும், ஒரு குரங்கும் இரு பூனைகளும் என்றெல்லாம் உண்டல்லவா "சிறுவர்க்கான சிறுகதைகள்", பண்டைப் பழங்காலத்திலிருந்து இந்த 1948 வரை அணுவளவும் மாருமல் அப்படி அப்படியே இருக்கும் கதைகள், அவற்றிலே ஒன்று இது!

இனி, பள்ளிப் பிள்ளைகள், இந்தக் கதையைப் பாடமாகக் கொள்ள வேண்டிய அவசியமில்லை! புதிய கதை ஒன்றிருக்கிறது, இதே தத்துவத்தைக் கொண்ட கதை, மிகமிக ரசமான கதை, நாம் கண்டு கேட்டு அநுபவிக்கும் கதை! இந்தக் கதையை, ஆரம்ப ஆசிரியர்கள், அவசியம் கற்றுக் கொள்ளவேண்டும், புதுப் பிள்ளைகளுக்கு புதிய கதை கேட்க வேண்டும் என்ற ஆசை தோன்றுமல்லவா, அப்போது அவர்களுடைய ஆவலைத் தீர்க்க இது மிகவும் பயன்படும்!

கட்டாய இந்தி இருக்கிறது என்று திராவிடர் கழகம் சொல்லி முடிப்பதற்குள்ளாக இல்லை, இல்லை என்கிறார் அமைச்சர் அவிநாசிலிங்கனார். கிடையாது, கிடையாது, கிடையவே கிடையாது என்கிறார் ஓமந்தூரார். கட்டாயமில்லை கட்டாயமில்லை, கட்டாயமென்பது கட்டாயம் இல்லை என்று அவசர அவசரமாகப் பேசுகிறார் அன்பர் கோபால ரெட்டியார்! இந்தி கட்டாயமா? ஒருபோதுமில்லை என்கிறது "தினசரி" ஏடு!

இவர்கள் இல்லை இல்லை என்று சொல்லச் சொல்ல மக்கள் உள்ளத்தில் இந்தி கட்டாயந்தான் என்பதில் இருந்த மிச்சம் மீதி ஐயப்பாடும் முற்றிலும் அகன்று விட்டது. கட்டாய இந்திதான் இப்போதிருப்பது என்பதை ஐயந்திரிபற அறிந்து கொண்டுவிட்டனர் மக்கள். ஆளவந்தார்களே வலிய வலிய முன்வந்து இந்தி கட்டாயமில்லை என்று அவசர அவசரமாக ஆளுக்கோர் இடத்தில் பேசக்கண்டால் யாருக்குத்தான் இவர்கள் பேச்சில் ஐயம் பிறவாது, இந்தி கட்டாயம்தான் என்ற எண்ணம் தோன்றுது? அதிலும் தமிழ் மக்கள்தான், சிறு பிள்ளைப் பருவத்திலேயே 'எங்க அப்பா குதிருக்குள் இல்லை' என்ற சிறுகதையைத் தெரிந்து கொண்டவர்களாயிற்றே, அவர்களுக்கு விஷயம் விளங்க விரிவுரையா வேண்டும், அமைச்சர்களின் அவசரப் பேச்சே போதுமே!

**"இல்லை! இல்லை! இல்லவே இல்லை! இந்தி கட்டாய பாடமென்பது ஒரு போதுமில்லை!"**—அவிநாசியாரும் ஓமந்தூராரும் கையாளும் இந்த விபரீதவாதம் மக்களை ஏமாற்ற முடியவில்லை என்பதுமட்டுமல்ல. மற்ற அமைச்சர்களைக் கூட ஏமாற்ற முடியவில்லை!

செப்பனிட்டு அமைச்சர் பக்தவச்சலனார் இந்த வாரம் "கல்கி" இதழில் கட்டுரையே எழுதிவிட்டார், இந்தி கட்டாய பாடம்தான் என்று!

அவர் கூறுகிறார்:

**முன்பெல்லாம் இந்தி கட்டாயபாடமில்லை. ஆகவே இந்தி எதிர்ப்பாளர்களும் அக்காலத்தில் இல்லை. மொகலாயர் இந்தியாவை ஆண்டுகொண்டிருந்த காலத்தில் பல ஹிந்துஸ்தானி சொற்கள் தமிழ்மொழியில் குடியேறி விட்டன. அவற்றில் ஒன்றுதான் மராமத்து என்ற சொல்லும்!"**

இந்த மூன்று வாக்கியங்களிலிருந்து மூன்று கருத்துக்கள் தெளிவாகப் புலனாகின்றன:

**ஒன்று:** முன்பெல்லாம் இந்தி கட்டாயபாடமில்லை என்று அமைச்சர் கூறுவதால் இப்போது இந்தி கட்டாய பாடம்தான் என்பதை அவரே ஒப்புக்கொண்டதாக ஆகிறது. இப்போது இந்தி கட்டாயமில்லை என்று கூறுவது வெறும் புரட்டு என்பது இதிலிருந்து நன்கு தெரிகிறது.

**இரண்டு:** முன்பு இந்தி கட்டாய பாடமில்லை ஆகவே இந்தி எதிர்ப்பாளர்களுமில்லை என்பதால், இப்போது இந்திக் கட்டாயம் இருக்கிறது எனவே இந்தி எதிர்ப்பாளர்களும் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. தெரியவே, இந்தி எதிர்ப்பாளர்கள் இருப்பதும், இல்லாமல் இருப்பதும், கட்டாய இந்தி இருக்கிறதா இல்லையா என்பதைத்

**தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்**

தான் பொறுத்து இருக்கிறதே தவிர வேறு எதையும் பொறுத்ததல்ல என்பது விளக்கமாகிறது. ஆகவே, இந்தி எதிர்ப்பாளர்கள் இந்தியை எதிர்ப்பது வெறும் அரசியல் வாண வேடிக்கை என்று கூறுவது அர்த்தமற்ற வெறுங் கூச்சல் என்பது தெற்றெனப் புலனாகிறது.

**மூன்று:** முன்பு, இந்துஸ்தானி, ஆள்வோரின் அன்புக்குரிய மொழியாக இருந்ததால் ஏராளமான இந்துஸ்தானிச் சொற்கள் தமிழில் இடம் பெற்றன ஆதலால் இப்போது இந்துஸ்தானி வந்தாலும் அதே கேடுதான் நேரும் என்பதும், இந்துஸ்தானி கட்டாய பாடமாக இல்லாதபோதே இவ்வளவு கேடு நிகழ்ந்ததென்றால் அது கட்டாய பாடமாக வரும் இந் நாளில் அதனால் வரும் கேடு அளவு கடந்ததாய் இருக்கும் என்பதும், எடுத்துக் காட்டாக **மராமத்து** என்ற இந்துஸ்தானிச் சொல் ஆட்சி பெற்ற காரணத்தால் **செப்பனீடு** என்ற செந்தமிழ்ச் சொல் வழக்கொழிந்து போயிற்று—இது அந்தக் காலத்து இந்துஸ்தானிப் பயிற்சி நம் மொழிக்கு விளைத்த ஊனம் எனில் இக் காலக் கட்டாயப் பயிற்சி எத்தனை அரிய தமிழ்ச் சொற்களை விழுங்கிவிடும் என்பதும்; எனவே இந்தி வந்தால் தமிழ் கெடாது என்பது அறியாதார் கூற்றே தவிர வேறில்லை என்பதும் நன்கறியக் கிடக்கின்றன.

இவ்வளவு உண்மைகளையும் சாமர்த்தியமாக மூன்று சிறு வாக்கியங்களில் நுழைத்துக் காட்டிய அமைச்சர் பக்த வச்சலனாரின் திறமையும், இந்த அரிய உண்மைகளை அஞ்சாமல் எடுத்துக் கூறிய அவர்தம் நெஞ்சச் செவ்வியும், அதிலும் இந்த உண்மைகளை "கல்கி" இதழின் சுதந்தர மலரில் பொறித்துவிட்ட பெருமையும் உண்மையிலேயே பாராட்டத் தக்கன என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை!

வாழ்க, பக்தவச்சலனார், வாழ்க! உண்மையை உரைத்த நம் செப்பனீட்டு அமைச்சர் நீடூழி வாழ்க! இந்தி கட்டாயமில்லை என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லி வந்த அன்பர் அவினாசியாரும் முதல்வர் ஓமாந்தூராரும் அமைச்சர் கோபால ரெட்டியாரும், மந்திரிகளின் ஏடு தினசரியும் திகைத்து நிற்கும் விதத்தில் **இந்தி கட்டாயர்தான்** என்பதை எழுத்து மூலமாக, அதுவும் 'கல்கி'யின் வாயிலாக நிரூபித்துக் காட்டிவிட்ட பக்தவச்சலனார் என்றென்றும் வாழ்க!

———


## அறிஞர் அண்ணாதுரையின்

### அழகிய எழுத்தோவியங்கள்!

★

**ரோமாபுரி ராணிகள்** 2 4 0 **கம்பரசம்** 1 8 0

**குமரிக் கோட்டம்** 1 0 0 **விடுதலைப் போர்** 1 0 0

**கற்பனைச் சித்திரம்** 1 0 0 **சிறுகதை** 1 00

**ஆரிய மாயை** 1 0 0 **உலகப் பெரியார்** 1 0 0

**வர்ணாஸ்ரமம்** 0 12 0 **ரேடியோவில் அண்ணா** 0 12 0

**தாழ்ந்த தமிழகம்** 0 8 0 **மே தினம்** 0 5 0


★

**குறிப்பு:** வணிகர்க்கு 20 சதம் கழிவு. தபால் செலவு தனி. தனிப்படி வேண்டுவோர் புத்தக விலையோடு முதல் புத்தகத்துக்கு அணா 5-ம் பிற புத்தகத்துக்கு 0—1—0 வீதமும் ரிஜிஸ்தர் தபால் சார்ஜ் சேர்த்து மணியார்டர் அனுப்ப வேண்டும். நேயர்கள் Book-Postல் அனுப்பச் சொல்லும் புத்தகங்கள் அவர்களுக்கு வந்து சேராவிடில் கம்பெனியார் பொறுப்பாளியல்லர்.

★

## திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.





Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanchelivan B. A. (Hons)